# பகுதி IV

## இலங்கை மத்திய வங்கியினதும் வங்கி நிறுவனங்களினதும் கடமைகளையும் தொழிற்பாடுகளையும் பற்றிய 1986 ஆம் ஆண்டின் முதன்மைச் சட்டவாக்கங்கள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | 1986 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறை (திருத்த) சட்டம் | ( i ) |
| 2. | 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கி (திருத்த) சட்டம் | ( iii ) |
| 3. | 1986 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் | ( xxvi ) |

# 1986 ஆம் ஆண்டின் 27ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தம்) சட்டம்

*[1986 செப்தெம்பர் 5 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 1979 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் (அ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பந்தியின் (XLVIII) என்னும் உட்பந்தியில், ''மா ''கொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவின்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''மாகொழும்புப் பொருளாதார ஆணைக் குழுவின்;'' என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் இறுதியில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்

''(XLIX) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்தின்''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) அப்பிரிவின் (த) என்னும் பந்தியில் ''இலாபங்களும் வருமானமும்'' என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக ''இலாபங்களும் வருமானமும்;'' என்னுஞ் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின் இறுதியில் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்:—

''(ந) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திலிருந்து ஆளொருவரால் பெறப்பட்ட ஏதேனும் பணத்தொகை''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 42 ஆம் பிரிவு, அப்பிரிவின் (த) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:—

''(தத) 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, சனாதிபதி நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியம்;''.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 54 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (உ) என்னும் பந்தியில் ''அரசாங்கத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகார சபைக்கு'' என்னும் சொற்களுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக ''அரசாங்கத்திற்கு அல்லது 1978 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதியச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட சனாதிபதி நிதியத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூர் அதிகாரசபைக்கு'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

6. இச்சட்டத்தின் 2 ஆம், 3 ஆம், 4 ஆம், 5 ஆம் பிரிவுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்துக்குச் செய்யப்பட்ட திருத்தங்கள், எல்லா நோக்கங் களுக்காகவும், முதன்மைச் சட்டவாக்கம் நடைமுறைக்கு வந்த தேதியன்று வலுவுக்கு வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

# 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம்

*[1986 செப்ரெம்பர் 24 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

## 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, மக்கள் வங்கி (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2. (இதனகத்துப் பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 4 ஆம், 5 ஆம் பிரிவுகள் இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகள் இடப்படுகின்றன:—

''4. வங்கியின் நோக்கங்கள் பின்வருவனவாதல் வேண்டும்:—

(1) (அ) இலங்கைக் கூட்டுறவு இயக்கம்;
(ஆ) கிராமிய வங்கித்தொழில்;
(இ) கமத்தொழில்; அத்துடன்
(ஈ) கைத்தொழில்
என்பவற்றை அபிவிருத்தி செய்தலும் அவற்றிற்கு உதவிசெய்தலுமாகும்; அத்துடன்

(2) வர்த்தக வங்கியொன்றின்;
(ஆ) அடகு பிடிப்பவரொருவரின்; அத்துடன்
(இ) வணிக வங்கியொன்றின்
தொழிலைக் கொண்டு நடாத்துதலாகும்.

5. (1) வங்கியானது அதன் நோக்கங்களை நிறைவேற்றுகையில், இப்பிரிவின் (3) ஆம், (4) ஆம் உட்பிரிவுகளில் தரப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கும், தகைமைகளுக்கும், வரையறைகளுக்கும் அமைவாக, பின்வரும் தத்துவங்கள், செயல்கள், காரியங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம், புரியலாம், அத்துடன் செய்யலாம்:—

(அ) அதன் எல்லாக் கிளைகளுக்குள்ளும் பகுதிகளுக்குள்ளும் இலங்கையிலும் வேறு இடங்களிலும் வங்கித் தொழிலைத் தாபித்தல், கொண்டு நடாத்துதல், அபிவிருத்தி செய்தல் அத்துடன் விரிவாக்குதல்;

(ஆ) குறுகியகால, இடைக்கால அத்துடன் நீண்டகாலக் கடன்களையும், மேலதிகப் பற்றுக்களையும், முற்பணங்களையும், வேறு கடன் வசதிகளையும் வழங்குதல்;

(இ) (i) நடப்புக் கணக்குகளையும், வைப்புக் கணக்குகளையும், சேமிப்புக் கணக்குகளையும் வேறு கணக்குகளையும் தொடங்குதல், பேணுதல் அத்துடன் முகாமை செய்தல்;

(ii) நாணயமாற்றுண்டியல்களை, வாக்குறுதிப் பத்திரங்களை, உண்டியல்களை, பூர்ஜாக்களை, கூப்பன்களை, வரைவுண்டியல்களை, ஆணைப்பத்திரங்களை, தொகுதிக் கடன் பத்திரங்களை, சான்றிதழ்களை, கட்டுப்பணப் பத்திரங்களை, அத்துடன் வேறு சாதனங்களையும், பிணைப் பொறுப்புக்களையும், இவை கைமாற்றக்கூடியனவாயினுஞ்சரி, அல்லது கைமாறத் தகுந்தவையாயினுஞ் சரி அல்லது கைமாற்றப்பட முடியாதவையாயினுஞ் சரி, அல்லது கைமாறத் தகாதவையாயினுஞ்சரி, கழிப்பனவு செய்தல், வாங்குதல், விற்றல் அத்துடன் கையாளுதல்;

(iii) கடன் பத்திரங்களையும் புழக்க நாணயத் தாள்களையும் அளித்தலும் வழங்குதலும்;

(iv) ஈருலோக நாணயங்களையும் உலோக நாணயங்களையும் வாங்குதலும் விற்றலும் கையாளுதலும், நாணயமாற்றுத் தொழிற்பாடுகளில் ஈடுபடுதலும்;

(v) கடன்களும் முற்பணங்களும் பற்றிப் பேரம் பேசுதலும், வைப்பின்மீது அல்லது பாதுகாப்பான கட்டுக்காப்பிற்காக அல்லது வேறுவகையாகப் பணத்தையும் பிணைப் பொறுப்புக்களையும் பெறுமதியானவற்றையும் பெறுதலும்;

(vi) பணத்தையும் பிணைப் பொறுப்புக்களையும் சேகரித்தலும் அனுப்பி வைத்தலும்;

(ஈ) ஆதனத்தை முகாமை செய்தலும், அத்துடன் வழமையாக வங்கித் தொழிலாளர்களினால் கொண்டு நடாத்தப்படும் ஏதேனும் வகையினதான முகவராண்மைத் தொழிலைக் கொண்டு நடாத்துதலும்;

(உ) வங்கியானது தகுதியானதெனக் கருதுகின்றவாறான அத்தகைய முறையில் பணத்தைக் கடனெடுத்தலும் அல்லது திரட்டுதலும், கோரப்படாத மூலதனம் உட்பட வங்கியின் தற்கால அல்லது எதிர்கால ஆதனத்தின் அல்லது சொத்துக்களின் முழுமையினதும்மீது அல்லது அதன் ஏதேனும் பாகத்தின்மீது ஈட்டினால், பொறுப்பினால் அல்லது சோந்தையினால் கடனெடுக்கப்

பட்ட, திரட்டப்பட்ட அல்லது வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தின் மீள் கொடுப்பனவை உறுதிப் படுத்தலும், அதையொத்த ஓர் ஈட்டினுல், பொறுப் பினுல் அல்லது சோந்தையினுல், வங்கி பொறுப் பேற்கக்கூடியதான ஏதேனும் கடப்பாட்டை அல்லது பொறுப்பை வங்கியானது புரிவதனை உறுதிப்படுத்து தலும் உத்தரவாதமளித்தலும்;

(ஊ) உசிதமெனக் காணப்படக்கூடியவாறுன அத்தகைய ஆட்களுக்கும், குழுமங்களுக்கும் அல்லது கம்பெனி களுக்கும், அத்துடன் உசிதமானவையெனக் கருதப் படக்கூடியவாறுன அத்தகைய நிபந்தனைகள் மீதும், பிணைப் பொறுப்புடனுயினுஞ்சரி இல்லாவிடினுஞ்சரி பணத்தை, பிணைப்பொறுப்புக்களை, அத்துடன் ஆதனத்தைக் கடனுகக் கொடுத்தலும் முற்பணமாகக் கொடுத்தலும் அல்லது அத்தகைய ஆட்களுக்கு, குழு மங்களுக்கு அல்லது கம்பெனிகளுக்கு அல்லது கம்பெனி களுக்குக் கடன் கொடுத்தலும், அத்துடன் பிணைப் பொறுப்புடனுயின், சாலத்திற்குக் காலம் புத்தி யானதெனக் கருதப்படக் கூடியவாறுன அத்தகைய பிணைப்பொறுப்பின் மீதும் அத்தகைய நிபந்தனைகளு டனும் மேற் கூறியவாறு கடன் கொடுத்தலும் அத் துடன் முற்பணம் கொடுத்தலும்;

(எ) இலங்கை அரசாங்கத்தினுல், அல்லது இலங்கையில் பதிவு செய்யப்பட்ட அல்லது இலங்கையில் அதன் பிரதான தொழில் இடத்தை வைத்திருக்கும் ஏதேனும் கம்பெனியினுல் அல்லது கூட்டுத்தாபனத்தினுல் வழங் கப்பட்ட அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட பங்குத் தொகுதிகளை, பங்குகளை, தொகுதிக்கடன் பத்திரங் களை, ஈடுகளை, முறிகளை அல்லது பிணைப் பொறுப்புக் களை வாங்குதல், விற்றல், முதலீடு செய்தல், கீழொப் பமிடல், கையாளுதல், அத்துடன் கையுதிர்த்தல்;

ஆயின், எவ்வாருயினும், வங்கியின் பொது முகாமையாளரின் விதப்புரையின்மீதும், அத்துடன் பணிப்பாளர்களின் கூட்டமொன்றில், அத்தகைய பணிப்பாளர்களில் ஐந்தில் மூன்று பங்கினர்க்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட தீர்மான மொன்றின் மூலம் அளிக்கப்பட்ட வங்கிப் பணிப் பாளர்களின் அங்கீகாரத்துடனும் தவிர, வங்கியானது அத்தகைய ஏதேனும் கம்பெனியால் அல்லது ஏதேனும் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்டவை யான அல்லது உத்தரவாதமளிக்கப்பட்டவையான பங்குத் தொகுதிகள், பங்குகள், தொகுதிக் கடன் பத்திரங்கள், ஈடுகள், முறிகள், பிணைப் பொறுப்புக் கள் என்பவற்றைப் பாதிக்கின்ற கொடுக்கல் வாங்கல்

(ஞ) இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் நாட்டில் அத்தகைய வங்கியைப் பதிவு செய்வதற்கு அல்லது ஏற்றங்கீகரிப்பதற்கு வசதியளித்தல்;

(ட) வங்கியானது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசியமானவையான எவையேனும் உரிமைகளையும் சலுகைகளையும் சிறப்புரிமைகளையும் பெறுவதன் பொருட்டு ஏதேனும் அரசாங்கத்திற்கு அல்லது ஏதேனும் உள்ளூரதிகார சபைக்கு ஏதேனும் உத்தரவாதத்தை அல்லது நட்டோத்தரவாதத்தைக் கொடுத்தலும் அதனுடன் எவையேனும் உடன்பாட்டொழுங்குகளைச் செய்துகொள்ளலும்;

(ண) எந்தத் தொழிலில் ஈடுபடுவதற்கு வங்கி அனுமதிக்கப்படுகின்றதோ அந்த ஏதேனும் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்காக அல்லது ஏதேனும் தொழிலை உதவுவதற்காக அல்லது அபிவிருத்தி செய்வதற்காக அல்லது வங்கியின் ஆதனத்தின் ஏதேனும் பெறுமதியை அதிகரிப்பதற்காக ஏதேனும் கம்பனியை அமைத்தலும் அத்துடன் எந்தக் குறிகோள்களுக்காக ஏதேனும் கம்பனியை அமைப்பதற்கு வங்கி அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றதோ அந்தக் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய ஏதேனும் கம்பெனியின் தொழிலைக் கொள்ளலும் பொறுப்பேற்றலும், அதிலுள்ள ஏதேனும் அக்கறையைக் கொள்வனவு செய்தலும் அல்லது அதிலுள்ள பங்குகளை அல்லது பங்குத் தொகுதிகளைக் கொள்ளலும் அல்லது வைத்திருத்தலும்;

(த) வங்கியின் வேலையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் தொழிலுக்கமர்த்தல்;

(ந) வங்கியின் அலுவலர்களினதும் சேவையாளர்களினதும் சேவை நிபந்தனைகள் தொடர்பிலும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்காகவும் விதிகளை ஆக்குதல்;

(ப) ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளல்;

(ம) விதந்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு அமைவாக அடகுபிடிப்பவர் ஒருவரின் தொழிலைக் கொண்டு நடாத்தல்;

(ய) ஏதேனும் கடனை, மேலதிகப்பற்றை, முற்பணத்தை அல்லது வேறு பண வசதியை எந்த ஆளுக்கு வங்கி அளிக்கின்றதோ அந்த எவரேனும் ஆளுக்குத் தொழினுட்ப உதவியை அளித்தலும் அத்துடன், காணியின்

பெறுமதியையும் கடன் பெறுப்வரின் கடன் பெறு தகைமையையும் மதிப்பீடு செய்வதிலும், தங்கத்தின் தரத்தைக் கணிப்பதிலும், வங்கித் தொழிலிலும், நிதித் துறையிலும் ஆட்களுக்குப் பயிற்சியைப் பொறுப்பேற்றலும் அல்லது பயிற்சிக்கு ஆதரவளித்தலும்;

(ர) அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு நிறுவனங்களிலிருந்து கைத்தொழில், கமத்தொழில் முயற்சிகளினால் திரட்டப்பட்ட அல்லது திரட்டப்படவுள்ள கடன்களுக்கு உத்தரவாதமளித்தல்;

(ல) எந்தத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு வங்கி அதிகாரமளிக்கப்பட்டதோ அந்தத் தொழிலைக் கொண்டு நடாத்தும் எவரேனும் ஆளின் அல்லது ஏதேனும் கம்பெனியின் வங்கித் தொழில், கழிவுத் தொழில் என்பன முழுவதையும் அல்லது அதன், ஏதேனும் பாகத்தைக் கொள்ளலும் பொறுப்பேற்றலும்;

ஆயின், எவ்வாறாயினும், வங்கிப் பொது முகாமையாளரின் எழுத்திலான அவதானிப்புகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர் ஆகக் குறைந்தது வங்கியின் நான்கு பணிப்பாளர்களினாலாவது கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துக்கு அமைவாகவும் அத்துடன் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடனும், மேற் கூறப்பட்ட தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்;

(வ) வங்கியின் முழுப் பொறுப்பேற்பை அல்லது அதன் ஏதேனும் பாகத்தைத் தகுதியென வங்கி கருதக் கூடியவாறான அத்தகைய பிரதி பயனுக்காகவும், அத்துடன் குறிப்பாக, வேறேதேனும் வங்கியின் பங்குகள், தொகுதிக்கடன் பத்திரங்கள் அல்லது பிணைப் பொறுப்புக்கள் என்பவற்றிற்காகவும் விற்றல் அல்லது கையுதிர்த்தல் அல்லது வங்கியின் தொழிலை வேறேதேனும் வங்கியின் தொழிலுடன் ஒன்றிணைத்தல்;

ஆயின், எவ்வாறாயினும், வங்கிப் பொது முகாமையாளரின் எழுத்திலான அவதானிப்புகளைச் சீர்தூக்கிப் பார்த்த பின்னர் ஆகக் குறைந்தது வங்கியின் நான்கு பணிப்பாளர்களினாலாவது கொடுக்கப்பட்ட அங்கீகாரத்திற்கு அமைவாகவும், அத்துடன் அமைச்சரின் எழுத்திலான முன்னங்கீகாரத்துடனும், மேற்கூறப்பட்ட தத்துவங்கள் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்;

(அஅ) வாடகைக் கொள்வனவுத் தொழிலில் ஈடுபடுதலும், அத்துடன் கழிவுகளையும், தரகுப்பணத்தையும், ஏனைய ஊதியங்களையும் பெற்றுக்கொள்ளலும்; அத்துடன்

(ஆஆ) அதன் குறிக்கோள்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் எய்துவதன் இடைநேர்விளைவான அல்லது அதற்குகந்தனவான அல்லது அதன் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்குத் தேவையான எல்லாக் காரியங்களையும் செய்தல்.

(2) சந்தர்ப்பம் வெளிப்படையாக அவ்வாறு தேவைப்படுத்தினால் தவிர, (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், வேறு ஏதேனும் பந்தியில் அடங்கியுள்ள ஏற்பாடுகளை அல்லது அதனகத்துக் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைத் தொடர்புறுத்திப் பார்ப்பதன்மூலம் அல்லது அவற்றிலிருந்து அல்லது அதிலிருந்து செய்யப்படும் ஊகத்தின்மூலம் எவ்வகையிலும் வரையறுக்கப்படவோ அல்லது மட்டுப்படுத்தப்படவோ ஆகாது என்பதுடன், அதன் மூலம் அளிக்கப்பட்ட தத்துவங்கள், (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தத்துவங்களுக்கு வெறுமனே துணை நிலையானவையாக அல்லது இணைந்தவையாகக் கருதப்படுதலுமாகாது; ஆனால் வங்கியானது, சந்தர்ப்பம் வேறு வகையாக வெளிப்படையாகத் தேவைப்படுத்தினாலன்றி, (1) ஆம் உட்பிரிவின் ஏதேனும் பந்தியால் அளிக்கப்பட்ட தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் நாட்டில் பிரயோகிப்பதற்கு முழுத் தத்துவங்களும் உடையதாதல் வேண்டும்.

(3) பின்வரும் மட்டுப்பாடுகளுக்கும் தகைமைகளுக்கும் அமைவாக வங்கியின் தொழில் கொண்டு நடாத்தப்படுதல் வேண்டும்:—

(அ) வங்கியின் நிதிகள், அதன் சொந்தப் பங்குகளைக் கொள்வனவு செய்தலிலோ அல்லது அவற்றைக் கையாளுதலிலோ செலவிடப்படலாகாது. அன்றியும் அதன் சொந்தப் பங்குகளின் பிணைப்பொறுப்பின்மீது அத்தகைய நிதிகள் கடனாகக் கொடுக்கப்படுதலுமாகாது;

(ஆ) வங்கியின் இன்னோர் ஊழியராக இருக்கும் எவரேனும் ஆளுக்குத் தவிர, வங்கி ஊழியரொருவரின் உத்தரவாதத்தின்மீது கடன், மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது வேறு கடன் வசதி எதுவும் வங்கியால் அளிக்கப்படுதலாகாது.

(4) ஓராம், (2) ஆம் உட்பந்திகளில் அடங்கியுள்ள எல்லாத் தத்துவங்களும் (3) ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கும் தகைமைகளுக்கும் அமைவாக வாசிக்கப்படுதலும்

பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும் என்பதுடன், முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் இப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்றலும் வேண்டும்.

(5) வங்கியானது அடகுபிடிப்போர் ஒருவரின் தொழிலைப் பிரயோகிக்கும்போது (90 ஆம் அத்தியாயமான) அடகுபிடிப்போர் கட்டளைச் சட்டம் வங்கிக்கு ஏற்புடைத்தாதலாகாது.''.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:—

'கொடுப்பனவில் தவறுகை புரிதலும் தவறுகை புரியப்படும் விடயத்தில் தண்டனை வட்டியும்.

29. (1) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தின் ஈட்டின்மீது வங்கியால் அளிக்கப்பட்ட ஏதேனும் கடன், மேலதிகப் பற்று, முற்பணம் அல்லது வேறு கடன் வசதி என்பன மீதான கொடுப்பனவில் முதலின் அல்லது வட்டியின் கணக்கிலோ, அல்லது இரண்டினதும் கணக்கிலோ அப்பணத்தொகை வருமதியாக விருப்பினும், தவறுகை புரியப்படுமிடத்து, அக்கடனின், மேலதிகப் பற்றின், முற்பணத்தின் அல்லது வேறு கடன் வசதியின் செலுத்தப்படாதுள்ள பகுதி தொடர்பிலும், அத்துடன் தவறுகைத் தேதி வரையில் அதன்மீது வருமதியாகவுள்ள வட்டி தொடர்பிலும் தவறுகை புரியப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) விடயத்துக்கேற்றுற்போல, வருமதியான தேதியன்று ஒரு கடன் தொடர்பில் அப்போது வருமதியாகவுள்ள தவணைப் பணத்தையும் வட்டியையும் செலுத்துவதற்கு அல்லது சமப்படுத்திய கொடுப்பனவை அல்லது வேறு கொடுப்பனவைச் செய்வதற்குக் கடனெடுப்பவர் தவறினல் அல்லது அசட்டை செய்தால் விதித்துரைக்கப்படக் கூடியவாறுன எவ்வீதத்தில் கடன் கொடுக்கப்பட்டுள்ளதோ அவ்வீதத்தை விஞ்சிய அத்தகைய வீதத்தில் அக்கடன் மீதான வட்டி செலுத்தப்பட வேண்டுமென வங்கியிடமிருந்து ஒரு கடனைப் பெறுவதற்கான ஏதேனும் சாதனம் ஏற்பாடு செய்யலாம்;

ஆயின், எவ்வாருயினும், சபையானது, அதன் முழுத் தற்றுணிபில், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் குறிப்பீடு செய்யப்பட்ட விதித்துரைக்கப்பட்ட வீதத்திலான வட்டிக்கொடுப்பனவை விட்டுவிடலாம் என்பதுடன், அதற்குப் பதிலாக, எந்தத் தேதியில் தவணைப் பணம் வருமதியாகவிருந்ததோ அந்தத் தேதியன்று தொடங்கி தவணைப்பணம் செலுத்தப்பட்ட தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதிக்கு, தவறுகையிலுள்ள தவணைப் பணத்தின்மீது உடன்பட்ட வீதத்தின் இரு மடங்குகள் வரையிலான வட்டி செலுத்தப்படற்பாலதாதல் வேண்டுமெனவும் தீர்மானிக்கலாம்.''.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 29அ, 29ஆ, 29இ, 29ஈ, 29உ, 29ஊ, 29எ, 29ஏ, 29ஒ, 29ஓ, 29ஔ, 29க, 29ங, 29ஞ, 29ட, 29ண, 29த, 29ந என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும்:—

" தவறுகை புரியப்படுமிடத்து சபையினால் எடுக்கப்படும் நடவடிக்கை

29அ. முதலின் அல்லது வட்டியின் கணக்கில் அல்லது இரண்டினதும் கணக்கில் ஏதேனும் கடன்மீது வருமதியான ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவில் தவறுகை புரியப்படும்போதெல்லாம், கடனின் செலுத்தப்படாத முழுப் பகுதி தொடர்பிலும் நாளதுவரை அதன்மீது வருமதியான வட்டி தொடர்பிலும் தவறுகை புரியப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் சபையானது அதன் தற்றுணிபில் 29ஆ என்னும் பிரிவில் அல்லது 29ஈ என்னும் பிரிவில் குறித்துரைக்கப்பட்டவாறு நடவடிக்கை எடுக்கலாம்;

ஆயின், எவ்வாறுயினும், 29ஆ என்னும் பிரிவிற்கிணங்க சபையானது எவ்விடயத்திலும் நடவடிக்கை எடுத்துள்ளவிடத்து, அல்லது நடவடிக்கை எடுக்கத் தொடங்கியுள்ளவிடத்து, பின்வருமாறு செய்வது புத்தியானதென அல்லது அவசியமானதெனச் சபை கருதின், 20ஈ என்னும் பிரிவின் கீழான தீர்மானத்தின் மூலம் அவ்விடயத்தில் அடுத்துப் பின்னர் சபையானது நடவடிக்கை எடுப்பதை எந்நேரத்திலும் எதுவும் தடுப்பதாகக் கருதப்படுதலாகாது.

ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தை உடைமையில் எடுப்பதற்கு முகாமையாளரின் அதிகாரமளிப்பு

29ஆ. (1) பிரிவு 29உ என்பதன் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது எழுத்தில் பதியப்படவேண்டிய தீர்மானத்தினல், அத்தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு எந்தக் கடன் தொடர்பில் தவறுகையானது புரியப்பட்டதோ அந்த ஏதேனும் கடனுக்குப் பிணை பொறுப்பாக வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்துட் புகுவதற்கும் அல்லது அத்தகைய ஆதனம் தொடர்பில் எவையேனும் கடன் உடன்படிக்கைகளின் நியதிகள் மீறப்பட்டிருக்குமிடத்து அத்தகைய ஆதனத்தின் உடைமையை எடுப்பதற்கும் அத்தகைய ஆதனத்தை முகாமை செய்வதற்கும் பேணுவதற்கும், அத்துடன் அவர் தவறுகை புரியாதிருந்தால் அல்லது அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளை மீறுதிருந்தால், அத்ததைய ஆதனத்தின் கட்டுப்பாட்டிலும் முகாமையிலும் ஈடுவைத்தவரால் பிரயோகிக்கப்பட்டிருக்கக்கூடியவாறன அதே தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அதிகாரமளிக்கலாம்.

(2) ஏதேனும் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சிக்காக வங்கியிடம் வைக்கப்படும் ஏதேனும் பொறித் தொகுதியின், எந்திரத் தொகுதியின் அல்லது வேறு அசைவுள்ள ஆதனத்தின் பிணைப் பொறுப்பின்மீது அளிக்கப்பட்ட ஏதேனும் கடன்மீது வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தொகை செலுத்தத் தவறியதாகவுள்ள போதெல்லாம், அல்லது அத்தகைய

ஆதனம் தொடர்பில் எவையேனும் கடன் உடன்படிக்கைகளின் நியதிகள் மீறப்படுமிடத்து, எந்தக் கமத்தொழில் அல்லது கைத் தொழில் பொறுப்பு முயற்சியில் அத்தகைய பொறித்தொகுதி, எந்திரத் தொகுதி அல்லது அசைவுள்ள வேறு ஆதனம் அமைந் துள்ளதோ அந்தக் கமத்தொழில் அல்லது கைத்தொழில் பொறுப்பு முயற்சியுட் புகுவதற்கும் அதன் உடைமையை எடுப்பதற்கும், அத்துடன் அத்தகைய அசைவற்ற ஆதனம் அடைவு வைக்கப் பட்டிருப்பின் அல்லது ஈடு வைக்கப்பட்டிருப்பின், அத்தகைய பொறுப்பு முயற்சியின் கட்டுப்பாட்டிலும் முகாமையிலும் பிர யோகிக்கப்பட்டிருக்கக் கூடியவாறான அதே தத்துவத்தைப் பிர யோகிப்பதற்கும் சபையானது எழுத்தில் குறித்துரைக்கப்பட்ட எவரேனுமாளுக்கு அதிகாரமளிக்கலாம்.

29இ. (1) ஏதேனும் ஆதனம் தொடர்பில் 29ஆ என்னும் பிரிவின் கீழ்ச் சபையின் தீர்மானத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆள், தீர்மானத்தின் நியதிகளின்படி பொதுவாக நடவடிக்கை எடுக்கவும் குறிப்பாகப் பின்வருவனவற்றைச் செய்ய வும் உரித்துடையவராதல் வேண்டும்:—

(அ) அத்தகைய ஆதனத்தின் விளையுளை விற்றல்;

(ஆ) எந்தப் பொறித்தொகுதியின் அல்லது எந்திரத் தொகுதியின் பிணைப்பொறுப்பின்மீது ஏதேனும் கடன் வழங்கப்பட்டு அத்தகைய கடன் தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ அப்பொறித்தொகுதி யிலிருந்து அல்லது எந்திரத்தொகுதியிலிருந்து முழுமை யாகவோ அல்லது பகுதியளவிலோ உற்பத்தி செய்யப் பட்ட பண்டங்களை விற்றல்;

(இ) அத்தகைய ஆதனத்திலிருந்து வாடகைகளையும், இலா பங்களையும் அல்லது வேறு வருமானத்தையும் பெறு தல்;

(ஈ) அத்தகைய ஆதனத்தைக் கட்டுப்படுத்துவதிலும் முகாமை செய்வதிலும் உறப்படும் செலவுகளை அத் தகைய ஆதனத்திலிருந்து பெறப்படும் வருமானத்தி லிருந்து செலுத்துதல்;

(உ) அவரது சேவைகளுக்கான ஊதியமாக நிர்ணயிப்பதற் குத் தகுதியானதெனச் சபை கருதக் கூடியவாறான அத்தகைய பணத்தொகையை (எதுவுமிருப்பின்) அத் தகைய வருமானத்திலிருந்து தனக்கென்று ஒதுக்கு தல்;

(ஊ) அத்தகைய ஆதனத்தின் மீதான ஈட்டின்கீழ் வங்கிக்கு வருமதியாகவுள்ள எல்லாப் பணங்களும் முழுமை யாகச் செலுத்தப்படும் வரை அல்லது அத்தகைய

ஆதனத்தின் உடைமையை விட்டுக் கொடுக்குமாறு (2) ஆம் உட்பிரிவின் கீழ் சபையினுல் பணிக்கப்படும் வரை அத்தகைய ஆதனத்தை உடைமையில் வைத்திருத்தல்.

(2) ஏதேனும் ஆதனம் தொடர்பில் 29ஆ என்னும் பிரிவின் கீழ்ச் சபையின் தீர்மானத்தினுல் அங்கீகாரமளிக்கப்பட்ட ஆள் ஒவ்வொருவரும்—

(அ) ஈடு வைத்தவருக்கு, அவரது பராமரிப்புக்காக, சபையானது அதன் தற்றுணிபில் நிர்ணயிக்கக்கூடியவாறுன அத்தகைய பணத் தொகையை (எதுவுமிருப்பின்) அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்படும் வருமானத்திலிருந்து மாதாந்தம் செலுத்துதல் வேண்டும்;

(ஆ) இதனகத்து முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் மிகுதியைச் சபை பணிக்கக் கூடியவாறுன அத்தகைய முறையிலும் அத்தகைய ஆளுக்கும் அல்லது ஆட்களுக்கும் காலாண்டிற்கொருமுறை அல்லது சபையினுல் பணிக்கப்பட்டவாறுக வேறு வகையில் செலுத்துதல் வேண்டும்;

(இ) அத்தகைய ஆதனம் தொடர்பில் அவரால் பெற்றுக் கொள்ளப்பட்ட அல்லது அவரால் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளினதும் தெளிவானவையும் செம்மையானவையுமான பதிவேடுகளை வைத்திருந்து சபை தீர்மானிக்கக்கூடியவாறுன அத்தகைய கால இடைவெளிகளில் அவற்றைச் சபைக்கு அளித்தல் வேண்டும்;

(ஈ) சபையினுல் பணிக்கப்பட்டவாறுன ஈடு வைத்தவருக்கு அல்லது வேறு எவரேனும் ஆளுக்கு அத்தகைய ஆதனத்தின் உடைமையை விட்டுக்கொடுத்தல் வேண்டும் என்பதுடன், இதனகத்து முன்னர் அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செய்யப்பட்ட பின்னர் அவர் வசம் எஞ்சியிருக்கும் அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் ஏதேனும் மிகுதியைச் சபைக்குச் செலுத்துதலும் வேண்டும்.

(3) சபையானது, ஈட்டின் கீழ் வங்கிக்கு வருமதியாகவுள்ள எல்லாப் பணத்தொகைகளும் முழுமையாகச் செலுத்தப்பட்டுள்ளபோது, ஈடு வைக்கப்பட்ட ஆதனத்தின் உடைமையை ஈடு வைத்தவரிடம் திருப்பி ஒப்படைத்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய ஆதனத்திலிருந்து பெறப்பட்ட வருமானத்தின் எஞ்சியிருக்கும் ஏதேனும் மிகுதியை அவருக்குத் திருப்பிக் கொடுத்தலும் வேண்டும்.

29ஈ. பிரிவு 29உ என்பதன் ஏற்பாடுகளுக்கு அமைவாக, சபையானது, எழுத்தில் பதியப்பட வேண்டிய தீர்மானத்தின் மூலம், அத்தீர்மானத்தில் குறித்துரைக்கப்பட்ட எவரேனும் ஆளுக்கு, எந்தக் கடன் தொடர்பில் தவறுகை புரியப்பட்டுள்ளதோ அந்தக் கடனுக்கு ஏதேனும் பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டிருக்கும் ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை, அத்தகைய கடனின் செலுத்தப்படாத முழுப் பகுதியையும், விற்பனைத் தேதி வரை அதன்மீது வருமதியாக வுள்ள வட்டியையும், அத்துடன் 29ஔ என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலனவான பணங்களையும் செலவு தொகைகளை யும் அறவிடுவதன் பொருட்டு பகிரங்க ஏலத்தில் விற்பதற்கு அதிகாரமளிக்கலாம் என்பதுடன், அதன் பின்னர், கடனெடுப் பவர் அல்லது வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட தேதியை அடுத்துப் பின்னர் செய்யப்பட்டதான அல்லது பதிவு செய்யப்பட்டதான ஆதனத்துக்கும் ஆதனத்திலும் கடனெடுப்பவருக்குள்ள உரிமை யின், உரித்தின் அல்லது அக்கறையின் எத்தகையதுமான கையளிப் பின் மூலம் அல்லது அதன் கீழ் உரிமை கோரும் எவரேனுமாள், எக்காரணத்திற்காகவும் சொல்லப்பட்ட தீர்மானத்தைச் செல்லு படியற்றதாக்குவதற்கு ஏதேனும் நீதிமன்றத்தில் பிரேரிப்பதற்குத் தகுதிவாய்ந்தவராதலாகாது என்பதுடன், நீதிமன்றமெதுவும், அத்தகைய ஏதேனும் விண்ணப்பத்தை ஏற்றுக் கவனித்தலு மாகாது.

29உ. (1) கடனெடுப்பவர் இறந்திருந்தால் அல்லது கட னுக்கான பிணைப் பொறுப்பாகத் தன்னிச்சையான உரிமை மாற் றத்தின் மூலம் அல்லது சட்டத்தின் நடைமுறையின் மூலம் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனத்திலான எத்தகையதுமான ஏதேனும் உரிமை, உரித்து அல்லது அக்கறை வேறெவரேனும் ஆளைச் சென்றடைதல் எப்படியிருப்பினும் (2) ஆம் உட்பிரிவில் வேறு வகையாக ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர, 29ஆ 29ஈ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகள், ஏதேனும் தவறுகையின் விடயத்தில் ஏற்புடையனவாதல் வேண்டும்

(2) கடனெடுப்பவர் ஒருவர் இறந்து, அவரின் மரணசாதன அதிகாரப் பத்திரம் அல்லது மரணச் சொத்து நிருவாகத் தத்து வப் பத்திரங்கள் எவரேனும் ஆளுக்கு வழங்கப்படாதிருக்கு மிடத்து, கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அல்லது கடனெடுப்ப வரினுல் வங்கிக்கு ஈடு வைக்கப்பட்ட ஆதனம் எம்மாவட்டத்தில் அமைந்துள்ளதோ அம்மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றம், அதற்கெனச் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் மீதும் நீதிமன்றம் கட்டளையிடக்கூடியவாறுன அத்தகைய ஆட்கள் எவரும் இருப் பின் அவர்களுக்கு விண்ணப்பம் பற்றிய அறிவித்தலைச் சேர்ப்பித்த பின்னரும் அத்துடன் மரண சாதன அதிகாரப் பத்திரம் அளித் தலில் அல்லது மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்குதலின் முறையற்ற காலதாமதம் ஏற்படும் சாத்தியம் உண்டெனத் திருப்திப்பட்டால், இப்பிரிவின் நோக்கங்களுக்காகக் கடனெடுப்பவரின் மரணச்சொத்தைப் பிரதிநிதித்துவப்படுத்து

வதற்கு ஓர் ஆளை நியமிக்கலாம். அத்துடன் இப்பிரிவின் கீழ் அத்தகைய கடனெடுப்பவரின் மரணச் சொத்தைப் பிரதிநிதித்து வப்படுத்துவதற்கு ஆளொருவர் நியமிக்கப்பட்டாலன்றியும் நிய மிக்கப்படும் வரையும், அத்தகைய கடனெடுப்பவரினல் புரியப் பட்ட ஏதேனும் தவறுகையின் விடயத்தில் 29ஆ, 29ஈ என்னும் பிரிவுகளின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதலாகாது.

29ஊ. ஏதேனும் ஆதனத்தின் விற்பனைக்கு அதிகாரமளிக் கின்றதும் 29ஈ என்னும் பிரிவின் கீழானதுமான ஒவ்வொரு தீர்மானம் பற்றிய அறிவித்தலும், கசெற்றிலும் நாளாந்தச் செய்தித் தாளிலும் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிவித்தலின் பிரதிகள், கடனெடுப்பவர் உயிருட னிருப்பின் அவருக்கும், அத்துடன் அவ்வாதனம் தொடர்பில் சட்டத்தினல் தேவைப்படுத்தப்பட்டவாருன தனது முகவரி யைப் பதிவு செய்துள்ள ஒவ்வோர் ஆளுக்கும், அரசிடமிருந்து பெறப்பட்ட குத்தகையின் கீழ் ஒரு குத்தகை பெறுநரின் அக் கறையை அவ்வாதனம் கொண்டிருப்பின் காணி ஆணையாளருக் கும் அனுப்பப்படலும் வேண்டும்.

29எ. ஒவ்வொரு விற்பனையினதும் தேதி, நேரம், இடம் என்பன பற்றிய அறிவித்தல், விற்பனைக்கென நிர்ணயிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் பதினன்கு நாட்களுக்குக் குறையாமல் கசெற் றில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், அத்தகைய அறிவித் தலின் பிரதிகள்––

(அ) கடன் பெற்றவர் உயிருடனிருந்தால் அவருக்கும், அத் துடன் 29ஊ என்னும் பிரிவின் கீழ் ஏதேனும் தீர் மானம் பற்றிய அறிவித்தல் எந்த ஆளுக்கு அனுப்பப் பட வேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அந்த ஒவ்வோர் ஆளுக்கும் அனுப்பப்படலும் வேண் டும்;

(ஆ) விற்கப்படவிருக்கும் ஆதனத்தின்மீது அல்லது அதற் கண்மையில் ஒட்டப்படலும் வேண்டும்.

29ஏ. (1) கடனின் செலுத்தப்படாத பகுதியின் முழுத் தொகையும் அத்துடன் (அதன்மீது 29 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் காப்பு வாசகத்தின் கீழ்) செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தண்டனை, வட்டி அல்லது வேறு வட்டி உட்பட வட்டியும் 29ஒள என்னும் பிரிவின் கீழ் சபையினல் அறவிடப் படற்பாலனவான பணங்களும் செலவு தொகைகளும் எவை யேனுமிருப்பின் அவற்றின் தொகையும் விற்பனைக்கென நிர்ண யிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் எந்நேரத்திலும் சபைக்கு அளிக் கப்பட்டிருப்பின் அவ்வாதனம் விற்பனை செய்யப்படலாகாது என் பதுடன், அவ்வாதனத்தின் விற்பனைக்காக 29ஈ என்னும் பிரிவின் கீழான தீர்மானத்தைப் பின்பற்றி மேலும் நடபடிகள் எவை யேனும் எடுக்கப்படலுமாகாது.

(2) எத்தவணைப் பணம் அல்லது சமப்படுத்திய கொடுப்பனவு அல்லது வேறு கொடுப்பனவு தொடர்பில் தவறுகை புரியப்பட்டதோ, அத்தவணைப் பணத்தின் அல்லது சமப்படுத்திய கொடுப்பனவின் அல்லது வேறு கொடுப்பனவின் தொகையும் (அதன் 29 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் காப்பு வாசகத்தின் கீழ்) ஏதேனும் தண்டனை வட்டியும் அல்லது வேறு வட்டியும், 20ஔ என்னும் பிரிவின் கீழ் சபையினால் அறவிடப்படற்பால னவான எவையேனும் பணங்களும் செலவு தொகைகளும் எவையேனுமிருப்பின் அவற்றின் தொகையும் விற்பனைக்கென நிர்ண யிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் எந்நேரத்திலும் சபைக்கு அளிக் கப்பட்டிருப்பின், வங்கியானது அதன் தற்றுணிபில் அவ்வாதனம் விற்பனை செய்யப்படலாகாதெனவும் அவ்வாதனத்தின் விற்பனைக் காக 29ஈ என்னும் பிரிவின் கீழான தீர்மானத்தைப் பின்பற்றி மேலும் நடபடிகள் எவையும் எடுக்கப்படலாகாதெனவும் பணிக் கலாம்

29ஒ. சபையானது, குறைவிலையொன்றை நிர்ண யிக்கலாம். இத்தொகைக்குக் குறைவாக ஆதனமானது வங்கியைத் தவிர எவரேனும் ஆளுக்கு விற்கப்படலாகாது.

29.ஓ. (1) ஒரே ஆதனத்தின் பிணைப்பொறுப்பின் மீது வங்கியினால் இரண்டு அல்லது அதற்குமேற்பட்ட கடன்கள் அளிக்கப்பட்டு அத்தகைய கடன்களுள் ஏதேனும் ஒன்றின்மீது அல்லது பலவற்றின்மீது வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தொகையின் கொடுப்பனவில் தவறுகைபுரியப்பட்டுள்ள ஏதேனும் விடயத்தில், மற்றைய கடன் அல்லது மற்றைய கடன்களுள் ஏதேனும் தொடர்பில் தவறுகைபுரியப்பட்டிராவிடினும், இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்; அத்துடன் சபையானது, அத்தகைய ஏதேனும் விடயத்தில், 29ஈ என்னும் பிரிவின்கீழான தீர்மானத்தின்மூலம், விடயத்திற்கேற்ப அத்தகைய இரு கடன்கள் தொடர்பிலும் அல்லது எல்லாக் கடன்கள் தொடர்பிலும் வங்கிக்கு வருமதியாகவுள்ள மொத்தத்தொகையை அறவிடுவதற்காக ஆதனத்தை விற்பனைசெய்ய அதிகாரமளிக்கலாம் என்பதுடன், இச்சட்டத்தின் இப்பாகத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) பிரிவு 29 அ தொடக்கம் 29ண வரையிலான பிரிவுகளில் (இரு பிரிவுகளும் உட்பட) உள்ள எதுவும், வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஓர் ஈட்டு முறியின்மீது வருமதியாகவுள்ள தொகையை அறவிடுவதிலிருந்து சபையைத் தடைசெய்தலாகாது.

29,ஔ. ஏதேனும் கடன்மீது வருமதியாகவுள்ள தொகையுடன் சபையானது, கடனாளியிடமிருந்து, அல்லது அவரின் சார்பில் செயலாற்றும் எவரேனும் ஆளிடமிருந்து பின்வருவனவற்றை அறவிடலாம் :—

(அ) எந்த ஆளுக்குக் கடன் அளிக்கப்பட்டதோ அந்த ஆளினால் எழுதி நிறைவேற்றப்பட்ட ஈட்டு முறியில் அடங்கியுள்ளனவான உடன் பாடுகளுக்கிணங்க, வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின்மீது பயனுறுத்தப்பட்ட ஏதேனும் காப்புறுதிப் பூட்கை தொடர்பிலான கட்டுப்பணங்கள் அத்துடன் ஏனைய விதிப்பனவுகள் ஆகியவற்றின் கொடுப்பனவிலும் அத்தகைய ஈட்டுப் பிணைமுறியில் அடங்கியுள்ளவையும் கடனாளியால் எழுதி நிறைவேற்றப்பட்டவையுமான உடன்பாடுகளின்கீழ் வங்கியால் உறப்படுவதற்கு அதிசாரமளிக்கப்பட்ட மற்றெல்லாச் செலவு தொகைகளினதும் விதிப்பனவுகளினதும் கொடுப்பனவிலும் வங்கியால் செலவழிக்கப்பட்ட எல்லாப் பணங்களும்;

(ஆ) ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனையை விளம்பரப்படுத்துவதற்கும் அதனை விற்பனை செய்வதற்கும் ஆன செலவுதொகை; அத்துடன்

(இ) கடனுக்கான பிணைப்பொறுப்பாக ஈடுவைக்கப்பட்டிருக்கும் ஆதனம் அரசிடமிருந்து பெறப்பட்ட ஒரு குத்தகையின்கீழ் கடனாளிக்குள்ள அக்கறையைக் கொண்டிருக்கின்றதும் அத்துடன் அத்தகைய ஆதனம் 29த என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அரசுக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கின்றதுமான ஏதேனும் விடயத்தில், சொல்லப்பட்ட குத்தகையின் கீழ் கடனாளியிடமிருந்து அரசுக்கு வருமதியான பணமாக அத்தகைய ஒப்படைப்பின் மீது சபையினால் அரசுக்கு செலுத்தப்படும் எல்லாப் பணங்களும்:

ஆயின், (ஆ) என்னும் பந்தியின்கீழ் உறப்பட்ட செலவுதொகைகள், சபையின் தீர்மானத்தினால் காலத்திற்குக்காலம் நிருணயிக்கப்படக்கூடியவாறான கடனின் அத்தகைய நூற்றுவீதத்தை விஞ்சுதலாகாது.

29க. ஈடுவைக்கப்பட்ட ஆதனம் விற்கப்பட்டால், வங்கியானது, ஈட்டின்மீது, வருமதியாகவுள்ள தொகையையும் 29ஔ என்னும் பிரிவின்கீழ் அறவிடற்பாலனவான பணங்களையும் செலவுதொகைகளையும் விற்றுவரவுகளிலிருந்து கழித்தபின்னர் எஞ்சியிருக்கும் தொகை ஏதேனுமிருப்பின் அதைக் கடனாளிக்கு, அல்லது கடனாளிக்குச் சேர்மதியான கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்வதற்குச் சட்

டப்படியாக உரித்துடையவரான எவரேனும் ஆளுக்கு, அல்லது யாருக்குப் பணம் செலுத்தவேண்டும் என்ற ஐயம் சபைக்கு இருக்குமிடத்து, ஈடுவைக்கப்பட்ட ஆதனம் அமைந்திருக்கும் மாவட்டத்தின் மாவட்ட நீதிமன்றத்திற்குச் செலுத்துதல் வேண்டும்.

29ங. (1) ஈடுவைக்கப்பட்ட ஆதனம் விற்பனை செய்யப்பட்டால், சபையானது விற்பனைச் சான்றிதழ் ஒன்றை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அதன் மீது ஆதனத்திற்கும் ஆதனத்திலும் கடனுளிக்குள்ள எல்லா உரிமைகளும், உரித்தும், அக்கறையும், கொள்வனவுசெய்பவருக்கு உரித்தாதலும் வேண்டும் அத்துடன் அதன் பின்னர் ஆதனத்தை வங்கிக்கு ஈடுவைத்த தேதியை அடுத்துப்பின்னர் செய்யப்பட்டதான அல்லது பதிவு செய்யப்பட்டதான, ஆதனத்திற்கும் ஆதனத்திலும் கடனுளிக்குள்ள உரிமையின், உரித்தின் அல்லது அக்கறையின் எத்தகையதுமான கையளிப்பின்மூலம் அல்லது அதன்கீழ் உரிமைகோரும் எவரேனும் ஆள் எக்காரணத்திற்காகவும் விற்பனையைச் செல்லுபடியற்றதாக்குவதற்கு ஏதேனும் நீதிமன்றத்தில் பிரேரிப்பதற்கு அல்லது கொள்வனவு செய்பவருக்கெதிராக ஆதனத்துக்கு அல்லது ஆதனத்தில் ஏதேனும் உரிமையை, உரித்தை அல்லது அக்கறையை ஏதேனும் நீதிமன்றத்தில் நிலைநாட்டுவதற்குத் தகுதி வாய்ந்தவராதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் சபையினுல் ஒப்பமிடப்பட்ட ஒரு சான்றிதழ் ஏதேனும் ஆதனத்தின் விற்பனை தொடர்பாக, இச்சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளும் இணங்கி ஒழுகப்பட்டுள்ளனவென்பதற்கு அவ்வாதனத்தின் விற்பனை தொடர்பில் முடிவான எண்பிப்பாதல் வேண்டும்.

(3) கொள்வனவுசெய்பவர் வங்கியைத் தவிர்ந்தவேறு ஆள் ஒருவராக இருக்குமிடத்து, சான்றிதழானது, பொருளளவில் விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும் என்பதுடன், கொள்வனவுசெய்பவர் வங்கியாக இருக்குமிடத்து, சான்றிதழானது, விதித்துரைக்கப்படக்கூடியவாறுன அத்தகைய வேறுபடிவத்தில் இருத்தலும் வேண்டும்.

(4) ஒவ்வொரு விற்பனைச் சான்றிதழும், அசைவுள்ள ஆதனத்தின் ஓர் உரிமைமாற்றம் என்றுற் போன்று முத்திரைத் தீர்வைக்கும் கட்டணங்களுக்கும், அத்துடன் சட்டத்தினுல் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் பதிவுக் கட்டணங்களுக்கும் ஏனைய கட்டணங்களுக்கும் உட்பட்டதாதல் வேண்டும் என்பதுடன், அவையாவும் கொள்வனவு செய்பவரினுல் செலுத்தப்பட்டற்பாலனவாதலும் வேண்டும்.

(5) விற்பனைசெய்யப்பட்ட ஆதனம் அரசிடமிருந்து பெறப்பட்ட ஒரு குத்தகையின்கீழ் ஒரு குத்தகை பெறுநரின் அக்கறையைக் கொண்டிருக்குமிடத்து, அப்போது ஆதனத்தைக் கொள்வனவுசெய்பவர் வங்கியைத் தவிர்ந்த வேறு ஓர் ஆளாக இருப்பின், விற்பனைச் சான்றிதழ், காணி ஆணையாளர்தனது தற்துணிபைப் பிரயோகிக்கையில் கொள்வனவு செய்பவரை அங்கீகரித்திருந்தாலன்றி, சபையினல் ஒப்பமிடப்படலாகாது.

(6) அரசிடமிருந்து பெறப்பட்ட ஒரு குத்தகையின்கீழ் ஒரு குத்தகைப் பெறுநரின் அக்கறையைக் கொள்வனவு செய்பவர் எவரையும் அங்கீகரிப்பதற்குக் காணி ஆணையாளர் (5) ஆம் உட்பிரிவின்கீழ் மறுக்கும்போதெல்லாம் :—

(அ) விற்பனை தொடர்பில் கொள்வனவு செய்பவரினல் வங்கிக்குச் செலுத்தப்பட்ட பணத்தொகைகள் எல்லாம் சபையினல் அவருக்குத் திருப்பிச்செலுத்தப்படுதல் வேண்டும்;

(ஆ) அத்தகைய விற்பனையை விளம்பரம் செய்வதற்கும், நடாத்துவதற்குமான செலவுதொகைகள் 29 ஔ என்னும் பிரிவின்கீழ் சபையினல் அறவிடப்படற்பாலனவான செலவுதொகைகளாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன்

(இ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆதனமானது மீள விற்கப்படுதல் வேண்டும்.

29ஞ. (1) இச்சட்டத்தின் முன்னைய ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்பவர், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது அவ்வாதனம் அமைந்துள்ள இடத்தின்மீது நியாயாதிக்கமுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தின்மீதும் 29ங என்னும் பிரிவின்கீழ் அந்த ஆதனம் தொடர்பில் வழங்கப்பட்ட விற்பனைச் சான்றிதழைக் காண்பிப்பதன்மீதும், அந்த ஆதனத்தின் உடைமையை ஒப்படைப்பதற்கான கட்டளையொன்றைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

(2) ஒராம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு விண்ணப்பமும் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக் கிணங்க சுருக்க நடவடிக்கைமுறை வகையாக செய்யப்படுதலும் கையுதிர்க்கப்படுதலும் வேண்டும்; அத்துடன் அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பத்தின் நோக்கத்திற்கெனக் கோப்பிடப்பட்ட எல்லா ஆவணங்கள் மீதும் அதன்மீது நடாத்

தப்படும் எல்லா நடவடிக்கைகள் மீதும் அத்தகைய விண்ணப்பம் தொடர்புடைய ஆதனத்தின் அதே பெறுமதியையுடைய ஏதேனும் அசைவற்ற ஆதனத்தின் உடைமையை ஒப்படைப்பதற்கான ஒரு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்வையொன்றை எழுதி நிறைவேற்றுவதற்கான விண்ணப்பத்தின்மீது அதனேடு சம்பந்தப்பட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான நடவடிக்கைகளின்மீதும் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலனவான அந்தந்த வீதங்களில் முத்திரைத் தீர்வைகளும் ஏனைய விதிப்பனவுகளும் செலுத்தப்படற்பாலனவாதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தில் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்பட்ட ஏதேனும் அசைவற்ற ஆதனம், கடனளியினது அல்லது அவர் சார்பில் வேறோர் ஆளினது அல்லது வங்கிக்கு ஆதனம் ஈடுவைக்கப்பட்டதனை அடுத்துப்பின்னர் கடனளியினல் உருவாக்கப்பட்ட உரித்து ஒன்றின்கீழ் உரிமைகோரும் வேறோர் ஆளினது இருப்பாட்சியிலிருக்குமிடத்து, மாவட்ட நீதி மன்றமானது கொள்வனவுசெய்பவரை அல்லது அவர்சார்பில் உடைமையைப் பெறுவதற்கென அவர் நியமிக்கக்கூடியவரான எவரேனும் ஆளை அவ்வாதனத்தின் உடைமையில் அமர்த்துவதன்மூலம் ஒப்படைப்பும் செய்யுமாறு கட்டளையிடல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின்பற்றி விற்கப்பட்ட ஏதேனும், அசைவற்ற ஆதனம், ஒரு வாடகைக் குடியிருப்பாளரின் அல்லது அதில் இருப்பாட்சி கொள்ள உரித்துடைய வேறு ஆளின் இருப்பாட்சியிலிருக்குமிடத்து, ஆதனத்தின்மீது துலாம்பரமானவோர் இடத்தில் சிங்கள, தமிழ், ஆங்கில மொழிகளில் விற்பனை நடைபெற்றுள்ளதென்ற ஓர் அறிவித்தலை ஒட்டுவதன்மூலமும், கடனளியின் அக்கறை, கொள்வனவு செய்பவருக்குக் கைமாற்றப்பட்டுள்ளதென வழமையான முறையில் அல்லது நீதிமன்றம் பணிக்கக்கூடியவாறுன அத்தகைய முறையில் வசதியான ஓர் இடத்தில் பிரகடனம் செய்வதன்மூலமும் மாவட்ட நீதிமன்றம் ஒப்படைப்புச்செய்யுமாறு கட்டளையிடல் வேண்டும். அத்தகைய பிரகடனத்தின் செலவுத் தொகை நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் ஒவ்வொரு விடயத்திலும் கொள்வனவு செய்பவரால் முற்பணமாகச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

(5) மூன்றும் உட்பிரிவின்கீழான அல்லது (4) ஆம் உட்பிரிவின்கீழான ஒவ்வொரு கட்டளையும், விடயத்திற்கேற்ப குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 287 ஆம் பிரிவின்கீழ் அல்லது 288 ஆம் பிரிவின் கீழ் செய்யப்பட்ட உடைமையை ஒப்படைப்பதற்கான ஒரு கட்டளையாகக் கருதப்படல் வேண்டும் என்பதுடன், அச்சட்

டக்கோவையின் ஏதேனும் ஏற்பாட்டை ஏற்புடையதாக்கும் நோக்கத்திற்காக, கடனுளியும் கொள்வனவு செய்பவரும் முறையே தீர்ப்புக் கடனுளியாகவும் தீர்ப்புக் கடன்பெறுநராகவும் கருதப்பட்டு, அக்கட்டளையானது, அவ்வாறு ஆக்கப்பட்ட ஒரு கட்டளையென்றாற்போன்று அதேமுறையில் வலியுறுத்தவும்படலாம்.

29ட. விற்கப்பட்ட ஆதனமானது வங்கியின் சார்பில் கொள்வனவு செய்யப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய ஆதனத்தை மீளவிற்பதற்கு முன்னர் எந்நேரத்திலும் சபையானது (கைப்பற்றலுக்கும் விற்பனைக்கும் ஆன செலவுதொகைகள் உட்பட) ஆதனம் எக்கடனுக்காக விற்கப்பட்டதோ அக்கடன் தொடர்பில் வருமதியாகவுள்ள தொகையையும், ஆண்டொன்றிற்கு விதித்துரைக்கப்பட்ட வீதத்தை விஞ்சாத ஒரு வீதத்தில் கூட்டுமொத்தப் பணத்தொகையின் மீதான வட்டியையும் கடனுளி அல்லது அவர் சார்பில் எவரேனும் ஆள் செலுத்துவதன்மீது விற்பனைச்சான்றிதளின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றின்மீதான புறக்குறிப்பொன்றின் மூலம் விற்பனையை இல்லாதாக்கலாம். அத்தகைய ஒரு புறக்குறிப்பு, காணிப் பதிவாளரின் அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டதன்மேல் இச்சட்டத்தின் கீழான விற்பனை ஒருபோதும் செய்யப்படவில்லை என்றாற்போன்று கடனுளிக்குச் சொல்லப்பட்ட ஆதனத்தை மீள உரித்தாக்குதல் வேண்டும்.

29ண. அவ்வாறு விற்கப்பட்ட ஆதனம் வங்கியின் சார்பில் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதுடன் விற்பனையானது 29ட என்னும் பிரிவின்கீழ் இல்லாதாக்கப்படாதுமிருப்பின், சபையானது எந்நேரத்திலும் அவ்வாதனத்தை மீள விற்பனைசெய்து, மூல விற்பனையில் கொள்வனவு செய்பவரால் கொள்ளப்பட்டிருக்கக் கூடியவாறான எல்லா உரிமையையும், உரித்தையும் அக்கறையையும் 29ங என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றின் மீதான புறக்குறிப்பொன்றின் மூலம் கொள்வனவு செய்பவருக்குக் கைமாற்றலாம். புறக்குறிப்பானது, மூல விற்பனையில் கொள்வனவு செய்பவரொருவருக்கான ஒரு சான்றிதழைப் போன்று அதே முத்திரைத் தீர்வைக்கும் விதிப்பனவுகளுக்கும் உட்பட்டதாதல் வேண்டும் என்பதுடன், காணிகள் பதிவாளரின் அலுவலகத்தில் அது பதிவு செய்யப்படும்போது, மேற்கூறப்பட்டவாறான அத்தகைய உரிமையையும், உரித்தையும், அக்கறையையும் கொள்வனவு செய்பவருக்கு உரித்தாக்குதலும் வேண்டும்.

29த. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளைப் பின் பற்றிய ஏதேனும் விற்பனையில் கடன் ஒன்றின் கொடுப்பன விலான தவறுகைக்காக வங்கியானது ஏதேனும் ஆதனத் தைக் கொள்வனவு செய்திருந்தால், வங்கியானது கடன், வட்டி, செலவுகள், செலவுத்தொகைகள் என்பனவற்றின் கணக்கால் வங்கிக்கு வருமதியாகவுள்ள மொத்தத் தொ கையை மேவும் அத்தகைய ஒரு பணத்தொகைக்கு அந்த ஆதனத்தை வங்கி மீள விற்பனை செய்வதனை இயலச் செய் வதற்கு அவசியமான காலப்பகுதியிலும் கூடுதலானவொரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆதனத்தை வைத்திருத்தலா காது:

ஆயின், அத்தகைய ஆதனம், அரசிடமிருந்து பெறப் பட்ட ஒரு குத்தகையின்கீழ் ஒரு குத்தகைபெறுநரின் அக் கறையைக் கொண்டிருக்குமிடத்து, சபையானது அத்தகைய ஆதனத்தை மீள விற்பனை செய்வதற்குப் பதிலாக, சபைக் கும், அமைச்சருக்கும், அரச காணிகள் என்னும் விடயத்திற் குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சருக்குமிடையில் உடன் படக்கூடியவாறான அத்தகைய நியதிகள்மீதும் நிபந்தனை கள்மீதும் அரசிற்கு குத்தகையைத் திருப்பி ஒப்படைக்கலாம்.

29ந. இப்பாகத்தில் சந்தருப்பம் வேறுவகையில் தேவைப் படுத்தினாலொழிய, அரசிடமிருந்து பெறப்பட்ட ஒரு குத் தகையின்கீழ் குத்தகை பெறுநரின் அக்கறையினது ஈடு ஒன்றினால் ஒரு கடன் பெறப்பட்டிருக்கும் ஏதேனும் விட யத்தில் ''ஆதனம்'' என்பது, குத்தகையின்கீழ் குத்தகை பெறுநரின் உரிமை, உரித்து அத்துடன் அக்கறை எனப் பொருள்படும்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்படு கின்றது.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:

(1) ''அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள்'' என்ற சொல்லமைப்புக்கான வரை விலக்கணத்திற்கு நேர்முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலமும்:

''கமத்தொழில்'' என்பது, பயிர்களையும், மருத்துவச் செடிகளையும் மூலிகைகளையும் வளர்த்தல், தோட்டத்தொழில், பட்டுப்பூச்சி வளர்த்தல், தேனீ வளர்த்தல், காடு வளர்த்தல், விலங்கு வேளா ண்மை, பறவைப்பண்ணை, விலங்கு வளர்த்தலும் பெருக்கமும், புல்லும் கால்நடைத்தீனியும் வளர்த்தல், விளையுளைச் சந்தைப் படுத்தல் என்பவை உட்பட பாற்பண்ணை நடாத்துதல் என்பவற் றை உள்ளடக்கும்;

''கமத்தொழில் பொறுப்புமுயற்சி'' என்பது ஏதேனும் கமத்தொழில், தோட்டத்தொழில் அல்லது ஏதேனும் விலங்கு விளையுள் என்பவற்றை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்கான ஒரு பொறுப்புமுயற்சி எனப்பொருள்படும் என்பதுடன், கால்நடை அல்லது பண்ணைப் பறவை வளர்ப்பு நோக்கத்திற்கான பொறுப்புமுயற்சி ஒன்றையும் உள்ளடக்கும்;

*(2)* ''அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள்'' என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலமும்:

''அங்கீகரிக்கப்பட்ட கடன்வழங்கு நிறுவனம்'' என்பது, (422 ஆம் அத்தியாயமான) பணச்சட்டத்தின் 88ஊ என்னும் பிரிவில் ''கடன் வழங்கு நிறுவனம்'' என்பதற்கான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட கடன் வழங்கு நிறுவனங்களெனக் காலத்துக்குக்காலம் பணிப்பாளர்கள் சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு நிறுவனங்களையும் உள்ளடக்கும்;

*(3)* ''பயிர்ச்செய்கைக் குழு'' என்பதன் சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை விட்டுவிடுவதன் மூலமும்;

*(4)* ''கூட்டுறவுச் சங்கம்'' என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலமும்:-

''தொழில் முயற்சி'' என்பது, எத்தகையதுமான பெயரினால் அல்லது பதவிப்பெயரினால் அடையாளங்காணப்படும் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழு ஒன்று எனப் பொருபடும் என்பதுடன், தனிக் கூட்டுத்தாபனமொன்றையும் அல்லது தனியுரிமையாண்மை ஒன்றையும் உள்ளடக்கும்'';

*(5)* ''வங்கியின் பொதுக் குழு'' என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன் மூலமும்:-

''கைத்தொழில்'' என்பது, மீன்பிடித்தல், இரத்தினக்கற்றொழில், போக்குவரத்து உல்லாசப் பிரயாணம் அத்துடன் சந்தையில் விற்பனை செய்வதற்கென ஏதேனும் விளையுளை அல்லது வியாபாரப் பொருளை உற்பத்தி செய்தலையும் தயாரித்தலையும் உள்ளடக்கும்;

''கைத்தொழில் பொறுப்புமுயற்சி'' என்பது-

*(அ)* எவையேனும் பொருட்களை, பண்டங்களை அல்லது சாமான்களை பொறிமுறைமூலம் உற்பத்தி செய்வதற்கான அல்லது தயாரிப்பதற்கான, அல்லது எவையேனும் பொருட்களை, பண்டங்களை அல்லது சாமான்களைப் பொறிமுறை மூலம் ஏதேனும் பதனிடுகைக்கு உட்படுத்துவதற்கான, அல்லது சுரங்

கம் தோண்டுவதற்கான, அல்லது அச்சிடுவதற்கான எந்திரங்களை அல்லது வாகனங்களை அல்லது கலன்களைப் பழுது பார்ப்பதற்கான ஒரு பொறுப்புமுயற்சியெனப் பொருள் படும்; அத்துடன்

(ஆ) ஆட்களை அல்லது பண்டங்களை இடம்பெயர்ப்பதற்கான ஒரு பொறுப்புமுயற்சியெனப் பொருள் படும்;

''கடன்'' என்பது பணவகையான கடன் எனப் பொருள்படும் என்பதுடன் ஏதேனும் மேலதிகப் பற்று அல்லது முற்பணம் அல்லது எப்பேரினுலோ அல்லது தரப்பேரினுலோ அழைக்கப்படும் ஏதேனும் வேறு பணவகையான கடனுதவியையும் உள்ளடக்கும்.

(6) ''இடைக்காலக்கடன்'' என்ற சொல்லமைப்புக்கான வரைவிலக்கணத்தை உடன்படுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும்:-

''விதித்துரைக்கப்பட்ட'' என்பது, இச்சட்டத்தின் கீழ் ஆக்கப்படும் விதிகள்மூலம் விதித்துரைக்கப்பட்ட என்று பொருள்படும்''.

DISCARDED

## 1986 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம்

*[1986 திசெம்பர் மாதம் 31 ஆம் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

**1978 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும், அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில முயற்சிகள் தொடர்பில் நிதி ஏற்பாடு செய்வதற்கும், அத்தகைய முயற்சிகளின் செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து, அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச்செய்வதற்கும், திரட்டுநிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் மேற்சொல்லப்பட்ட கருமங்களுடன் தொடர்பான அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமான ஒரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1986 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) இச்சட்டத்தில், ''நிதியாண்டான 1987 ஆம் ஆண்டு'' எனக் குறிப்பீடு செய்யப்படுவதும் 1987 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் தேதி தொடங்கி 1987 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் தேதியன்று முடிவடைவதுமான காலப்பகுதிக்கான சேவைக்காக ஐயாயிரத்து ஐந்நூற்று எழுபத்தாறு கோடி தொண்ணூறு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரம் ரூபாவென மதிப்பிடப்படும் அரசாங்கத்தின் செலவினத் தொகையானது, செலவினம் எதற்கும் அதிகாரமளிக்கும் வேறு சட்டமெதற்கும் பங்கமின்றி —

(அ) திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்தின் அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து வழங்கப்பட்ட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளிலிருந்தும்; அத்துடன்

(ஆ) அரசாங்கத்துக்காகவும் அதன் சார்பிலும் இலங்கையிலோ, வெளிநாட்டிலோ திரட்டப்பட வேண்டுமென இத்தால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடன்களின் வரும்படியிலிருந்தும் பெறப்படல் வேண்டும்.

ஆகவே எவ்வாறாயினும் அத்தகைய வரும்படியின் கூட்டு மொத்தத் தொகையானது இரண்டாயிரத்து எழுநூற்றி எண்பத்தெட்டுக்கோடி ஐம்பது இலட்சம் ரூபாவினை விஞ்சுதலாகாது.

இதன்கண், முன்னர் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஐயாயிரத்து ஐந்நூற்று எழுபத்தாறு கோடி தொண்ணூறு இலட்சத்து தொண்ணூற்றேழாயிரம் ரூபா கொண்ட பணத்தொகை இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு செலவிடப்படலாம்.

(2) இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள், அரசாங்கத்துக் காகவும், அதன் சார்பிலும் கடன் திரட்டுவதற்கு அதிகார மளிக்கும் எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் பங்கமின்றிப் பயனுடையனவாதல் வேண்டும்.

3. (1) நிதியாண்டான 1987 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற் கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் அரசாங்கம் பெறும் பெறுகைகள் அத்தகைய முயற்சிகளின் கணக்கில் வரவுவைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு வரவு வைக்கப்படும் பெறுகைகளின் கூட்டு மொத்தத் தொகையானது, அந்த அட்டவணையின் 3 ஆம் நிரையில் உள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப் பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லையிலும் பார்க்கக்குறைந்ததாக இருத்தலுமாகாது. அத்துகைய முயற்சியின் தேறிய மேன்மிகை ஏதேனுமிருப்பின், அத்தேறிய மேன் மிகையானது நிதியாண்டான 1987 ஆம் ஆண்டு முடிவுற்ற பின்னர் ஆறு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், திரட்டு நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் கீழான தேறிய மேன்மிகையைத் தீர்மானிக்கும் நோக்கத்துக்காக பின்வரும் கட்டணங்கள், அவையாவன :—

(அ) முயற்சியினது வருமானத்திற்கு முறைப்படி பொறுப்பாக்கப்படற் பாலனவான, கொடுக்கப்பட்டனவாயினுஞ்சரி அல்லது சேர்மான மானவைபாயினுஞ்சரி முயற்சியினது தொழிற்பாட்டு, தாபன, மற் றும் ஏனைய செலவுகள்; அத்துடன்

(ஆ) முயற்சியினது அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான, சொத்தினது தேய்மானத்தை மேவுவதற்கான ஏற்பாடு, என்பன, ஒவ்வொரு முயற்சியின் வருமானத்திலும் எதிரீடு செய்யப்படல் வேண்டும்.

(3) நிதியாண்டான 1987 ஆம் ஆண்டின்போது, இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ் வொரு முயற்சியின் பேரிலும் அரசாங்கத்தால் உறப்படும் செல்வினம், அந்த நிதி ஆண்டின்போது அத்தகைய முயற்சியிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகளி லிருந்து கொடுபடுதல் வேண்டும். ஆனால், அத்தகைய செலவினம் அந்த அட்டவணை யின் II ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக் கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

(4) நிதியாண்டான 1987 ஆம் ஆண்டின் முடிவில், இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு முயற்சியிலிருந்தும் நிலுவையாகவுள்ள பற்றுமீதி, அந்த அட்டவணையின் IV ஆம் நிரையிலுள்ள நேராத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது. அத்துடன் அந்த நிதியாண்டின் முடிவில் அந்த முயற்சியின் மொத்தப் பொறுப்புகள், அந்த அட்டவணையின் V ஆம் நிரையிலுள்ள நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படலாகாது.

4. நிதியாண்டான 1987 ஆம் ஆண்டின்போது எப்போதேனும் இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் 1 ஆம் நிரையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள எவையேனும் முயற்சிகளிலிருந்து அரசாங்கம் பெறும் வரவுகள், அத்தகைய முயற்சியின் மீது அரசாங்கத்தினல் உறப்பட்ட செலவினங்களுக்குப் போதியன வாயிராவிடின், அமைச்சர், அத்தகைய செலவினத்திற்கு அவசியமென அவர் கருதும் அத்தகைய தொகைகள் முற்பணங்களாகத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்துக்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து கொடுபடுதல் வேண்டுமெனக் காலத்துக்குக்காலம் கட்டளைமூலம் பணிக்கலாம். எவ்வாறுயினும், அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்படும் பணத்தொகைகளின் கூட்டு மொத்தத் தொகை, அந்த அட்டவணையின் 2 ஆம் நிரையிலுள்ள அதன் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள செலவினங்களின் ஆகக்கூடிய எல்லைக்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். அத்தகைய முயற்சி சம்பந்தமாக அவ்வாறு முற்பணமாகக் கொடுக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை அமைச்சராற் கட்டளை மூலம் பணிக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் திரட்டு நிதியத்துக்கு மீண்டும் கொடுபடுதல் வேண்டும்.

5. (1) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையின் ஏற்பாடுகளின் பயனுக, அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள எந்தத்தலைப்பின் கீழும் தோன்றும் எந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழும், மீண்டுவரும் செலவினத்திற்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்து, ஆனுல் செலவு செய்யப்படாமலும் அல்லது செலவு செய்யப்படுதல் சாத்திய மில்லாமலும் இருக்கும் எவையேனும் பணங்கள், திறைசேரிச் செயலாளரின் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரின் கட்டளை மூலம் அந்நிகழ்ச்சித்திட்டத்திற்குட்பட்ட ஆக்கப் பொருள் செலவினத்திற்கெனச்செய்யும் பகிர்வுக்கு அல்லது அத்தலைப்பிற்குட்பட்ட வேறேதேனும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீண்டுவருஞ் செலவினம் அல்லது ஆக்கப் பொருட் செலவினம்என்ற பகிர்வுக்கு மாற்றப்படலாம்.

(2) இச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் தலைப்பின் கீழுள்ள நிகழ்ச்சித்திட்டமெதன்கீழும் ஆக்கப்பொருட் செலவுக்குப் பகிரப்பட்டுள்ள பணங்களெவையும் அப்பகிர்விலிருந்து வேறெதற்கும் மாற்றப்படல் ஆகாது.

6. (1) வரிகளிலிருந்தும் வேறு மூலங்களிலிருந்தும் பெறப்படும் வரவுகள், அதிகாரமளிக்கப்பட்ட செலவினங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென எதிர்பார்க்கப்பட்ட பணத்தொகைகளையும் விடக் குறைவாயிருக்குமென; அல்லது

(2) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்கு அல்லது நோக்கங்களுக்கு முதலில் ஒதுக்கப்பட்ட பணத்தொகைகள் மேலும் தேவைப்படமாட்டாவென,

அமைச்சர் திருப்திப்படுமிடத்து, திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குச் சேர்ந்த அல்லது அதனிடமுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து அவரால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழான செலவினத்திற்காக முன்னர் வழங்கப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அரசாங்கத்தின் அங்கீகாரத்துடன் முழுமையாக அல்லது பகுதியளவில் அவர் மீளப்பெறலாம்.

7. (அ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் II ஆம் நிரையி லும் IV ஆம் நிரையிலும் V ஆம் நிரையிலும் குறித்துரைக்கப்பட் டுள்ள ஆகக்கூடிய எல்லைகளுள் எதனையும்,

(ஆ) இச்சட்டத்திற்கான இரண்டாம் அட்டவணையின் III ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஆகக்குறைந்த எல்லைகளுள் எதனையும்,

அமைச்சர் அரசாங்கத்தின் அங்கீகரத்தோடு 1988 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் கட்டளைமூலம் வேறுபடுத்தலாம் அல்லது மாற்றலாம்.

இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் கட்டளை எதுவும் பாராளுமன்றத்தால் தீர் மானத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலன்றிப் பயனுடையதாதலாகாது.

அத்தகைய கட்டளை எதுவும் அதன்கண் அவ்விதம் கூறப்பட்டிருந்தால், அதன்கண் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடியதும் அத்தகைய கட்டளை ஆக்கப்பட்ட தேதிக்கு முந்தியதுமான அத்தகைய தேதியிலிருந்து பயனுடையதாயிருந்ததாகக் கருதப்படல் வேண்டும்.

8. பாராளுமன்றமானது, தீர்மானத்தின் மூலம் இச்சட்டத்திற்கான இர ண்டாம் அட்டவணையை, அட்டவணையின் தோதான நிரைகளுக்கு எதேனும் முயற்சியையும்,

(அ) அத்தகைய முயற்சி தொடர்பிலான எல்லா ஆகக்கூடிய எல்லைகளையும் அல்லது அவற்றுள் எவற்றையும்;

(ஆ) அத்தகைய முயற்சி தொடர்பிலான ஆகக்குறைந்த எல்லையையும்

சேர்ப்பதன் மூலம் திருத்தலாம்.